# தூத்துக்குடியில் தேரி நிலங்கள் பாதுகாப்பு மண்டலங்களாக அறிவிக்கப்படும்!

## தூத்துக்குடியில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... 6 ஆம் பக்கத் தொடர்ச்சி!



ஏரல், சாயர்புரம், திருவைகுண்டம், சாத்தான்குளம் பகுதிகளில் புதிய பேருந்து நிலையங்கள்.

ஒட்டபிடாரத்தில் புதிய அரசுக் கல்லூரி.

தூத்துக்குடி மாவட்டத்தில் இருக்கும் கடற்கரை கிராமங்களில் தூண்டில் வளைவுகள் அமைக்கப்பட்டிருக்கிறது.

தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தில் விரிவாக்கப் பணிகளும் நடந்திருக்கிறது.

பழையகாயல் படகு இறங்குதளம் மற்றும் கடல் அரிப்பு தடுப்புச் சுவர்.

முக்காணி, பழையகாயல் கூட்டுக்குடிநீர் திட்டம்.

சாத்தான்குளம் - உடன்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டம் புனரமைப்பு.

திருவைகுண்டம் பேட்மாநகரத்தில் மினி ஸ்டேடியம்.

கோவில்பட்டியில் அரசு தலைமை மருத்துவமனை மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவு புதிய கட்டடம்.

உடன்குடி அனல் மின் நிலையத்தில் 650 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அலகுகள் அமைக்கப்பட்டு உற்பத்தி தொடங்கிவிட்டது.

தூத்துக்குடி சிப்காட்-இல் பர்னிச்சர் பூங்கா.

பெரியதாழை மீன் ஏலக் கூடம்.

வேம்பார் கருப்பட்டி மற்றும் பனை பொருட்கள் குறுங்குழுமக் கட்டடம்.

தூத்துக்குடி மாநகராட்சியில் சாலை, குடிநீர், கழிவுநீர்க் கால்வாய் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது.

பெரும்பாலான பகுதிகளில் இப்போது மழைநீர் தேங்காத நிலையை உருவாக்கியிருக்கிறோம்.

தூத்துக்குடியில் 30 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில், 55 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பு பெறும் வகையில் இரண்டு கப்பல் கட்டும் தளங்கள் அமைய இருக்கிறது.

ஸ்பேஸ் பார்க் (விண்வெளிப் பூங்கா) அறிவித்திருக்கிறேன்.

ஒட்டப்பிடாரம் அல்லிக்குளம் பகுதியில் புதிய சிப்காட் வளாகம் அமைக்கும் பணிகள் நடந்து கொண்டிருக்கிறது.

தருவைகுளத்தில் புதிய மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

புதியம்-புத்தூர் ஜவுளிப்பூங்கா அமைக்க அடிக்கல்,

காயல்பட்டணத்தில் அரசு உயர்சிறப்பு மருத்துவமனைக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

திருவைகுண்டத்தில் புதிதாக கட்டும் மருத்துவமனை கட்டடத்திற்கு மறைந்த நம்முடைய தோழர் நல்லகண்ணு அவர்களின் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

இன்னும் நிறைய இருக்கிறது.

### மீனவத் தோழர்களுக்கு – திராவிட மாடல் அரசின் சாதனைகள்!

தூத்துக்குடியில் மீனவ தோழர்கள் நிறைய பேர் இருப்பீர்கள். உங்களுக்காக திராவிட மாடல் அரசு செய்த சாதனைகளும் நிறைய இருக்கிறது. அதையெல்லாம் இப்போதுதான், பரமக்குடி நிகழ்ச்சியில் பேசிவிட்டு அப்படியே கிளம்பி தூத்துக்குடிக்கு வந்திருக்கிறேன். அதனால், எல்லாவற்றையும் சொல்வதற்கு எனக்கு நேரம் இல்லை.

ஒன்றை மட்டும் நான் பணிவுடன் சொல்லிக் கொள்கிறேன். தூத்துக்குடிக்காக இந்த ஸ்டாலின் போன்று, இதற்கு முன்பு வேறு யாரும், இவ்வளவு கவனமும் - முக்கியத்துவமும் கொடுத்து டெவலப் பண்ணியிருக்க மாட்டார்கள்! அதை மட்டும் என்னால் அடித்து சொல்ல முடியும்! நெஞ்சை நிமிர்த்தி சொல்ல முடியும்.

இப்படி, ஐ.டி. வளர்ச்சி, தொழில்துறை வளர்ச்சி, விளையாட்டுத்துறை வளர்ச்சி, துறைமுகம், கப்பல் என்று சாதனைகளால் நினைவில் வைத்திருக்க வேண்டிய நம்முடைய தூத்துக்குடியை, வேதனைகளால் நினைவில் வைத்து கொள்ள வேண்டிய காலம் 5 ஆண்டுக்கு முன்பு இருந்தது.

### தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு!

**தூத்துக்குடி என்று சொன்னால், 13 அப்பாவிகளை சுட்டுக்கொன்ற துப்பாக்கிச்சூட்டை ஞாபகத்துக்கு வர வைத்த பாவிகளின் ஆட்சியாக அ.தி.மு.க. இருந்தது.**

### 2018 மே 22 மறக்க முடியுமா?

**சட்டம் ஒழுங்கைப் பற்றி வாய்கிழிய பேசிக் கொண்டு இருக்கிறாரே எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி... காவல்துறைக்கு பொறுப்பு வகித்து கொண்டு, "துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் இறந்ததே எனக்கு தெரியாது, நான் இப்போதுதான் டி.வி.யில் பார்த்தேன்" என்று கொஞ்சம்கூட வெட்கமே இல்லாமல் பேட்டி அளித்தார். இதுதான், அவர் ஆட்சி நடத்திய லட்சணம்.**

**பழனிசாமி சொன்ன பொய்களை எல்லாம் நீதியரசர் அருணா ஜெகதீசன் அவர்கள் விசாரித்து அறிக்கை கொடுத்தார்கள். அதில் தெளிவாக அம்பலமாகிவிட்டது. பழனிசாமிக்கு தெரிந்தேதான் அந்தக் கொலைகள் நடந்திருக்கிறது. தலைமைச் செயலாளர், டி.ஜி.பி, உளவுத்துறை ஐ.ஜி. ஆகியோர் நிமிடத்திற்கு நிமிடம் இங்கு என்ன நடக்கிறது என்று முதலமைச்சராக இருந்த பழனிசாமியிடம் சொல்லிக் கொண்டே இருந்தார்கள்.**

**இப்படி, பழனிசாமி ஆட்சியில் ஸ்டெர்லைட் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு, அவர்கள் கல்வித் தகுதிக்கு ஏற்ப பணி நியமன ஆணைகளையும், கூடுதலாக 5 இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகையையும் வழங்கியவன்தான் இந்த ஸ்டாலின் என்பதை நான் சொல்கிறேன்.**

இதையெல்லாம் மறைத்துவிட்டு, இன்றைக்கு பெரிய மகா யோக்கியரைப் போன்று, ஊர் ஊராக சென்று பழனிசாமி அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார். பேசுகிறார் என்றுகூட சொல்லக் கூடாது. கண்டதையும் வாந்தி எடுத்துக் கொண்டிருக்கிறார்.

### மனசாட்சி – நேர்மை இல்லாத பழனிசாமி!

பழனிசாமி கொஞ்சம்கூட மனசாட்சியோ, நேர்மையோ இல்லாதவர் என்பதற்கு, மற்றொரு சாட்சிதான் சாத்தான்குளத்தில் நடந்த தந்தை-மகன் கொல்லப்பட்ட கொடூரம்! இன்றைக்கு அந்த வழக்கில் தீர்ப்பு வந்துவிட்டது. ஆனால், தவறு செய்தவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டிய அன்றைய முதலமைச்சர் பழனிசாமி, அந்த கொலையையே மறைக்க பார்த்தார். 'இது லாக்அப் மரணமே இல்லை' என்று கூசாமல் பொய் சொன்ன அன்றைய அமைச்சர், யார் என்று உங்களுக்கு தெரியும், கடம்பூர் ராஜூ. இப்போது அவர் கோவில்பட்டி தொகுதியில் அ.தி.மு.க. சார்பாக போட்டியிடுகிறார்.

இதை எல்லாம் மக்கள் ஞாபகம் வைத்திருப்பார்கள். அதையெல்லாம் மறைக்க வேண்டும்; அதை மறக்க வேண்டும் என்று திட்டம்போட்டு, இப்போது பழனிசாமி என்ன கையாள்கிறார் என்றால், என் மீதும் - இங்கு மேடையில் இருக்கும் தங்கை கனிமொழி மீதும் தனிநபர் தாக்குதலை நடத்திக் கொண்டிருக்கிறார் பழனிசாமி!

### பழனிசாமியின் அலங்கோல ஆட்சி!

இதனால் அவரது அலங்கோல ஆட்சியின் நினைவுகள் மறைந்துவிடுமா என்ன? அவரது தராதரம்தான் இதனால் சந்தி சிரிக்கிறது. "முதலமைச்சராக இருந்தவர் பேசுவது மாதிரியா பேசுகிறார்?" என்று சாமானிய மக்கள்கூட முகம் சுளிக்கிறார்கள். இன்னும் பலர், "இவரெல்லாம் எப்படி முதலமைச்சராக இருந்தார்?" என்று ஆச்சரியப்படுகிறார்கள்.

அம்மையார் சசிகலா அவர்களின் காலைப் பிடித்து முதலமைச்சர் ஆனவர். பிறகு, டெல்லியின் காலைப் பிடித்து அந்தப் பதவியில் தொடர்ந்து இருந்தவர். "நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்" என்பதுபோன்று, அவர் ஆட்சி செய்த நான்காண்டில் தமிழ்நாட்டின் மாநில உரிமைகள் எல்லாம் காணாமல் போனது!

இவர் ஆட்சி செய்த அழகை சொல்லி வாக்கு கேட்டால், பொடிக்கு புகையிலைகூட சிக்காது. அதனால் இப்போது, புது டெக்னிக்-இல் இறங்கியிருக்கிறார். டெல்லியுடன் ஒத்துப் போகும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தால்தான், தமிழ்நாட்டுக்கு திட்டங்கள் கிடைக்குமாம்.

முதலில், கூட்டணியில் இல்லாத எதிர்க்கட்சி ஆண்டால் திட்டங்களும் - நிதியும் கிடைக்காது என்று சொல்வதே பச்சை அயோக்கியத்தனம். டெல்லி பா.ஜ.க.தான் இப்படி சொல்லி மிரட்டுகிறார்கள் என்றால், கொஞ்சம்கூட வெட்கமே இல்லாமல் பழனிசாமியும் அதையே சொல்லி வாக்கு கேட்கிறார்.

நான்காண்டு பா.ஜ.க.வின் எல்லா விஷயத்திலும் சமரசம் செய்துவிட்டுதானே ஆட்சியில் இருந்தீர்கள். அப்போது நீங்கள் தமிழ்நாட்டுக்காக கொண்டு வந்த திட்டங்கள் என்ன? கொஞ்சம் சொல்லுங்கள் பழனிசாமி அவர்களே!

கஜா, ஒக்கி புயல் இதெல்லாம் தாக்கி தமிழ்நாடு கடுமையான பாதிப்புக்கு உள்ளானதே?

மாநில அரசு கேட்ட பேரிடர் நிவாரணம் எவ்வளவு?

நீங்கள் இணக்கமாக இருந்த பா.ஜ.க. அரசு ஒதுக்கிய தொகை எவ்வளவு? சொல்ல தைரியம் இருக்கிறதா?

மொத்த மாநிலமும் நீட் விலக்கு கேட்டோமே? கிடைத்ததா?

தமிழ் - தமிழ்நாடு - தமிழர்கள் என்றாலே ஒன்றிய அரசுக்கு வெறுப்பு!

யார் ஆட்சி செய்தாலும் தமிழ்நாட்டுக்கு நிதியோ - திட்டமோ ஒன்றிய பா.ஜ.க. அரசு வழங்காது. ஏன் என்றால், தமிழ், தமிழ்நாடு, தமிழர்கள் என்றாலே அவர்களுக்கு வெறுப்பு! "தமிழ்ப் பண்பாடு என ஒன்று இல்லவே இல்லை, எல்லாமே பாரத கலாசாரம்" என்று

## 'நீட்' தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு தரவேண்டும் என்று ஒன்றிய பா.ஜ.க. அரசை பழனிசாமியால் கேட்க முடியுமா?

ஒற்றைத்துவத்தை பேசும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பா.ஜ.க.விடம் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

காங்கிரசுடன் கூட்டணியில் இருந்தபோது தி.மு.க. தமிழ்நாட்டுக்கு என்ன திட்டம் கொண்டு வந்தது என்று வேறு, பழனிசாமி கேட்கிறார். நான் சொல்லவா? பாய்ண்ட் பை பாய்ண்ட் பட்டியல் போட்டு சொல்லவா? நேரம் இல்லை... சுருக்கமாக சொல்கிறேன்.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசால் எவ்வளவோ திட்டங்கள்... ஒன்பதாண்டுகள் ஆட்சியில் தொடர்ந்து இருந்தோம். இன்றைக்கு தமிழ்நாட்டில் நாம் பார்க்கும் பெரிய உட்கட்டமைப்பு திட்டங்கள் எல்லாம் அப்போது வந்ததுதான்.

இந்திய அரசு செலவு செய்த திட்டச் செலவில் 11 விழுக்காட்டை தமிழ்நாட்டு வளர்ச்சிக்கு நாம் கொண்டு வந்தோம். மிக முக்கியமான 69 திட்டங்களை நிறைவேற்றிக் காட்டியிருக்கிறோம்.

ஒன்று சொல்கிறேன். அதுவே போதும்...

தமிழுக்கு செம்மொழி தகுதி யார் காலத்தில் கிடைத்தது? சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு நீங்கள் பயணிக்கும் முக்கியமான தேசிய நெடுஞ்சாலைகள் எல்லாம் எங்கள் கூட்டணி ஆட்சியில் போட்டதுதான்.

கிண்டி - கத்திப்பாரா, கோயம்பேடு மற்றும் பாடியில் மிகப்பெரிய மேம்பாலங்கள், சென்னை துறைமுகம், மதுரவாயல் பறக்கும் சாலை, சேதுசமுத்திரத் திட்டம் தொடக்கம், சேலத்தில் புதிய இரயில்வே கோட்டம், 90 ரயில்வே மேம்பாலங்கள் கட்ட அனுமதி, பல புதிய ரயில்கள், திருச்சி - கோவை - மதுரை விமான நிலையங்கள் விரிவாக்கம், துறைமுக விரிவாக்கப் பணிகள், சரக்குப் பெட்டக முனையங்கள், நீர்வழிப் போக்குவரத்து வசதிகள் - ஒரகடத்தில் தேசிய மோட்டார் வாகன சோதனை மற்றும் ஆராய்ச்சி மையம், உலகத் தரத்தில் சேலம் உருட்டாலை, புதிய குளிர் உருட்டாலை உருவாக்கம், சென்னைக்கு அருகே தேசிய கடல்சார் பல்கலைக்கழகம், தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம், திருவாரூரில் மத்தியப் பல்கலைக்கழகம், நெசவுத் தொழிலுக்கு இருந்த சென்வாட் வரி நீக்கம், கரூர் - ஈரோடு - சேலம் உயர்தொழில்நுட்ப ஜவுளிப்பூங்கா, நெம்மேலி கடல்நீரை குடிநீராக்கும் திட்டம், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், அடக்குமுறை பொடா சட்டம் ரத்து! இன்னும் நிறைய இருக்கிறது!

### சென்னை மெட்ரோ ரயில் திட்டம்!

இது எல்லாம் ஒன்றிய அரசின் கூட்டணியில் தலைவர் கலைஞரின் வழிகாட்டுதலுடன், தி.மு.க. கொண்டு வந்த திட்டங்கள்! இவ்வளவு ஏன், இன்றைக்கு நாம் பெரிய அளவில் விரிவுபடுத்தி வரும் திட்டமான சென்னை மெட்ரோ திட்டம், எங்கள் கூட்டணி ஆட்சியில் கொண்டு வந்ததுதான்.

இதுவே ஒன்றிய பா.ஜ.க. அரசு இருந்திருந்தால் என்ன சொல்லியிருப்பார்கள்? "சென்னைக்கு எதற்கு மெட்ரோ?" "அதுதான் உங்கள் மாநிலத்தில் விடியல் பயணம் திட்டம் இருக்கிறதே? உங்களுக்கெல்லாம் மெட்ரோ சரிபட்டு வராது" என்று, இப்போது கோவை - மதுரை - திருச்சிக்கு நிராகரித்தது போன்றே சென்னைக்கும் நிராகரித்திருப்பார்கள். நல்ல வேளையாக சென்னை தப்பித்துவிட்டது.

நான் இப்போது இவ்வளவு சொன்னேன் அல்லவா... ஒன்றிய பா.ஜ.க. அரசுடன் கூட்டணியில் இருந்து நீங்கள் சாதித்தது என்ன? சாதிக்கப் போவது என்ன? முடிந்தால் சொல்லுங்கள்.

நீட் விலக்கு தருவோம் என்று சொல்ல வைக்க முடியுமா?

மும்மொழி திட்டம் கிடையாது என்று சொல்ல வைக்க முடியுமா?

தேசிய கல்விக் கொள்கை எனும் காவிக் கொள்கையை தமிழ்நாட்டில் செயல்படுத்த மாட்டோம் என்று சொல்ல வைக்க முடியுமா?

நீண்ட காலமாக முகாம்களில் இருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை தருவோம் என்று சொல்ல வைக்க முடியுமா?

சிறுபான்மையினருக்கு எதிரான பொது சிவில் சட்டம், வக்பு திருத்தச் சட்டம், குடியுரிமை திருத்தச் சட்டம் ஆகியவற்றை திரும்பப் பெற வைக்க முடியுமா?

இப்போது, கிறிஸ்துவ மக்களுக்கு எதிராக இப்போது கொண்டு வரப் போகும் FCRA சட்டத்தை வாபஸ் வாங்க வைக்க முடியுமா?

### தலையாட்டிப் பொம்மை – ரப்பர் ஸ்டாம்ப்!

இதைப் பற்றியெல்லாம் முதலில் உங்களால் வாய் திறந்து நான்கு வார்த்தை, உங்கள் டெல்லி ஓனரை மேடையில் வைத்துக் கொண்டு பேச முடியுமா? உங்களால் எதுவுமே முடியாது! பா.ஜ.க.கூட இருக்கும்வரை வெறும் தலையாட்டிப் பொம்மையாக, ரப்பர் ஸ்டாம்பாகத்தான் நீங்கள் இருக்க முடியும்! அதனால், உங்களால் ஒருநாளும் வெற்றிபெற முடியாத வீண் சவால்களை நிறுத்துங்கள்.

காலில் விழுந்தோமா, காலை வாரிவிட்டோமா, அடுத்த காலை நோக்கிப் போனோமா, இவ்வளவுதான் பழனிசாமியின் வாழ்க்கைச் சுருக்கம்! அவரது மொத்த அரசியல் வாழ்க்கையுமே இந்த மூன்றில் அடங்கிவிடும்!

### அடிமை பழனிசாமியின் ஆட்சி!

அடிமை பழனிசாமியின் ஆட்சி வேண்டாம் என்று முடிவெடுத்து, 2021-ஆம் ஆண்டு எங்கள் மேல் நம்பிக்கை வைத்து தமிழ்நாட்டு மக்கள் வாக்களித்தீர்கள். உங்கள் நம்பிக்கையைக் காப்பாற்றி, ஒன்றிய அரசின் வஞ்சனைகளை எல்லாம் மீறி, நம்முடைய வாக்குறுதிகளை எப்படி நிறைவேற்றிக் காட்டியிருக்கிறோம்.

இப்போது, 2026 தேர்தல். தமிழ்நாட்டின் அடுத்தகட்டப் பாய்ச்சலுக்கான செயல் திட்டமாக, தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருக்கிறேன். முன்பே சொன்னேன், நம்முடைய தேர்தல் அறிக்கை 2026 தேர்தலின் ஹீரோ, ஹீரோயின் மட்டுமல்ல, இதுதான் சூப்பர்ஸ்டார் என்று சொன்னேன்! இந்த சூப்பர்ஸ்டாரை தயாரிக்க அமைக்கப்பட்ட குழுவின் தலைவர்தான் என்னுடைய அருமைத் தங்கை கனிமொழி. தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்து அவர்கள் கொடுத்த ரிப்போர்ட்டை வைத்துதான் இதை தயாரித்தோம். இப்போது நம்முடைய சூப்பர்ஸ்டாரின் சூப்பர் ஹிட் அறிவிப்புகளை சொல்லவா?

முதலில் இல்லத்தரசி திட்டம்! ஃபர்ஸ்ட் பாலே சிக்சர்தான்! இல்லத்தரசி திட்டத்தில் எவ்வளவு ரூபாய்க்கு கூப்பன் தரப் போகிறோம்? எட்டாயிரம் ரூபாய்க்கு கூப்பன்! இந்தக் கூப்பனை வைத்து, உங்களுக்குத் தேவைப்படும் வீட்டு உபயோகப் பொருளை புதிதாகவும் வாங்கிக் கொள்ளலாம்; இல்லை என்றால், பழைய பொருளை எக்ஸ்சேஞ்ச் செய்தும் வாங்கிக் கொள்ளலாம்! உங்களுக்குப் பிடித்த கடையில், உங்களுக்குப் பிடித்த கம்பெனியில் வாங்கிக் கொள்ளலாம்! வாஷிங் மெஷின், ஃபிரிட்ஜ், டி.வி., கிரைண்டர், மிக்சி, மைக்ரோ-வேவ் அவன், இண்டக்‌ஷன் ஸ்டவ் - இவற்றில் எதை வாங்கலாம் என்று இப்போதே பெண்கள் எல்லாம் டிஸ்கஸ் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். வீட்டுக்காரரிடம் எல்லாம் கேட்காதீர்கள். கேட்டாலும், ஒப்புக் கொள்ளாதீர்கள். எதாவது முறைத்தால், அண்ணனிடம் சொல்லிவிடுவேன் என்று சொல்லிவிடுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன். இது முழுக்க முழுக்க உங்களுக்காக கொண்டு வரப்பட்டிருக்கும் திட்டம்! பெண்கள்தான் முடிவு செய்ய வேண்டும்!

எப்படி தலைவர் கலைஞர் சொன்னபடியே கலர் டிவியும், கேஸ் அடுப்பும் கொடுத்தாரோ! அவரது மகனான நானும், சொன்னபடியே இல்லத்தரசி திட்டத்தை நிறைவேற்றுவேன்.

அடுத்த வாக்குறுதி, உரிமைத்தொகை. இப்போது மாதம் ஆயிரம் ரூபாய் என்று ஒரு கோடியே 31 இலட்சம் சகோதரிகள் பெற்று வரும், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, திராவிட மாடல் 2.0 ஆட்சியில் இனி மாதம் 2 ஆயிரம் ரூபாய்! இப்போதே பெண்கள் அனைவரும் கணக்கு போட ஆரம்பித்துவிட்டார்கள். என்ன கணக்கு? பொங்கலுக்கு முன்னால், சொல்லிவிட்டு 3 ஆயிரம்! பிப்ரவரியில், சொல்லாமலேயே 5 ஆயிரம்! ஆகமொத்தம் 8 ஆயிரம்! அடுத்து, இல்லத்தரசி கூப்பனில் 8 ஆயிரம். "எட்டு + எட்டு! உதயசூரியனுக்குதான் எங்கள் ஓட்டு!" என பெண்கள் எல்லாம் முடிவு செய்துவிட்டார்கள். அதனால், நம்முடைய வெற்றியும் இந்த முறை யாரும் எட்டாத உயரத்திற்கு போகப் போகிறது!

இதுமட்டுமல்ல, கல்லூரிக்குப் போகும் மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் - தமிழ்ப் புதல்வன் உதவித்தொகையும் ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

மேலும், முதியோர், மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்றப் பெண்கள் என அனைத்து உதவித்தொகைகளும் இனி இரண்டு மடங்காக வழங்கப் போகிறோம்.

### மீனவர்களுக்கு நிவாரணத் தொகை!

மீன்பிடித் தடைக்கால சிறப்பு நிவாரணத் தொகை 8 ஆயிரம் ரூபாயில் இருந்து 12 ஆயிரம் ரூபாயாகவும், மீன்பிடி குறைவுக் கால சிறப்பு நிவாரணத் தொகை 6 ஆயிரம் ரூபாயில் இருந்து 9 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும். மீனவர்களுக்கு மகிழ்ச்சி தானே?

20 லட்சத்துக்கும் அதிகமான உழவர்கள் பயன்பெறும் வகையில், நவீன மின்சார பம்பு செட்டுகளை வழங்கப் போகிறோம்!

நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு 5 ரூபாய் உயர்த்தி வழங்கப்படும்.

அடுத்த 5 ஆண்டுகளில் 10 ஆயிரம் புதிய பேருந்துகள் இயக்கப்படும்.

காலை உணவுத்திட்டம் எட்டாம் வகுப்பு வரை விரிவாக்கப்படும்.

ஆயிரம் வெற்றிப் பள்ளிகள் அமைக்கப்படும்.

அனைத்து வகுப்பறைகளும் ஸ்மார்ட் வகுப்பறைகள் ஆக்கப்படும்.

தூத்துக்குடியில் புற்றுநோய்க்கான நவீன சிகிச்சை வசதிகள் ஏற்படுத்தப்படும்.

நான் முதல்வன் 2.0 திட்டத்தில் தூத்துக்குடியை சேர்ந்த ஒரு லட்சம் இளைஞர்களுக்கு கப்பல் கட்டுமானத் தொழில்நுட்பம் மற்றும் சரக்கு மேலாண்மையில் திறன் பயிற்சிகள் வழங்கப்படும்.

### தேரி நிலங்கள் – பாதுகாப்பு மண்டலங்கள்!

தூத்துக்குடியில் காணப்படும் தனித்துவமான சிவப்பு மணல் திட்டுகளான தேரி நிலங்கள், பாதுகாப்பு மண்டலங்களாக அறிவிக்கப்படும்.

இவையெல்லாம் நிறைவேறி, தூத்துக்குடி வாழ்வாதாரம் பெருக, தென் மாவட்டங்கள் தற்போது கண்டுவரும் ஏற்றம் தொடர, தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணம் தொடர, அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு, மக்கள் அனைவரும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்குதான் நீங்கள் வாக்களிக்க வேண்டும்!

தமிழ்நாடா? டெல்லியா? என்ற இந்த ஜனநாயகப் போரில், தமிழ்நாடு அணிதான் வெல்ல வேண்டும்! கப்பலோட்டிய தமிழரின் மண்ணில் டெல்லிக்கு கப்பம் கட்டும் அ.தி.மு.க. அடிமைகள் டெப்பாசிட்கூட வாங்கக் கூடாது!

அதற்கு, தூத்துக்குடி தொகுதியில் கீதாஜீவனுக்கும், திருச்செந்தூர் தொகுதியில் அனிதாராதாகிருஷ்ணனுக்கும், விளாத்திகுளம் தொகுதியில் மார்க்கண்டேயனுக்கும், கோவில்பட்டி தொகுதியில் கா. கருணாநிதிக்கும், ஒட்டப்பிடாரம் தொகுதியில் ராமஜெயத்துக்கும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்.

அதேபோன்று, திருவைகுண்டம் தொகுதியில் சகோதரர் ராகுல் காந்தியின் ஆதரவு பெற்ற காங்கிரஸ் வேட்பாளர் ஊர்வசி அமிர்தராஜ் அவர்களுக்கு கை சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்!

அமைய இருக்கும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில் எங்கள் சாதனைகளை நாங்களே முறியடிக்கும் வகையிலான ஆட்சியை வழங்குவோம். நாடு வளம் பெற, நல்லாட்சி தொடர்ந்திட ஆதரிப்பீர் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை!

வெல்வோம் ஒன்றாக! வெல்வோம் ஒன்றாக! வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# சாத்தான்குளம் தந்தை - மகன் கொலையை மறைத்தவர் பழனிசாமி!